இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 07.08.2026

# ‘ஷோபா மாடல்’ ஸ்டிக்கர்கள்!

தமிழ்நாட்டை ஆளும் ‘ஷோபா மாடல்’ ஆட்சியானது தினந்தோறும் புதுப்புது ஸ்டிக்கர்களைத் தயாரித்து வருகிறது. சொந்தமாகச் சிந்தித்து எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றத் துப்பு இல்லாத இன்றைய ஆட்சியானது, முந்தைய ‘திராவிட மாடல்’ ஆட்சியின் திட்டங்களின் பெயரை மாற்றி ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டு இருக்கிறது. நேற்றைய தினம் வெளியான நிதிநிலை அறிக்கையே ஸ்டிக்கர்களின் தொகுப்பாக இருக்கிறது.

- ★ **கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை மகளிர் உரிமைத் தொகை ஆக்கிவிட்டார்கள்.**
- ★ **நான் முதல்வன் திட்டத்தை வெற்றித் திறன் பயிற்சித் திட்டம் என மாற்றி விட்டார்கள்.**
- ★ **கலைஞர் கனவு இல்லம் திட்டம், வெற்றி வீடுத் திட்டம் எனச் சொல்கிறார்கள்.**
- ★ **அன்புச்சோலைகள், இனி மூத்தகுடிமக்கள் பொழுது போக்கு மையமாம்.**
- ★ **உலகம் உங்கள் கையில் என்பதற்கு வெற்றி மடிக்கணினி திட்டமாம்.**
- ★ **முதல்வர் படிப்பகங்கள் இனி டிஜிட்டல் நூலகம் என அழைக்கப்படுமாம்.**
- ★ **நன்னிலம் மகளிர் நில உடமைத் திட்டம், மண்ணின் மகள் திட்டம் என மாற்றப்பட்டுள்ளது.**
- ★ **விலையில்லா மிதிவண்டி திட்டத்துக்கு நவீன மிதிவண்டித் திட்டம் என்று பெயர்.**
- ★ **தகைசால் பள்ளிகளை இனி பெருந்தலைவர் காமராசர் சிறப்புப் பள்ளி என மாற்றி இருக்கிறார்கள்.**
- ★ **ஆடு, செம்மறி ஆடு ஊக்குவிப்புத் திட்டத்துக்கு வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம் என ஆக்கி இருக்கிறார்கள்.**

- இப்படி அனைத்துக்கும் புதுப்பெயர் வைத்து, புதுப்பெயிண்ட் அடித்து பழைய வீட்டையே புதுவீடு கட்டியது போல மாற்றி விட்டார் முதலமைச்சர் விஜய். எவ்வளவு பெரிய சாதனை இது? நாளைய தினம் தனது சாதனை என்று சொல்லும் போது இந்தப் புதுப் பெயர்களைச் சொன்னால் போதும். அவர் தொடங்கிய புதுத் திட்டமாக இவை அனைத்தும் ஆகிவிடும்.

**தமிழ்நாட்டில் போதைப் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க திராவிட மாடல் அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம், ‘போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு’ என்ற திட்டமாகும். இத்திட்டம் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் நாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதையே இவர்களும் அறிவித்திருக்கிறார்கள்.**

தி.மு.க. ஆட்சியில் செயல்பட்ட பிங்க் பேட்ரோல் (Pink Patrol) திட்டத்தை ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என மாற்றினார்கள். இந்த படைக்காக காவலர்களை நியமிக்காமல் ஏற்கெனவே உள்ள காவலர்களை இந்தப் படையில் சேர்த்து மறுபெயர் இட்டிருக்கிறார்கள்.

**“தமிழ்நாட்டை 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி கொண்ட மாநிலமாக மாற்றுவதே எனது இலக்கு ஆகும்” என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுத் துறையின் அனைத்துக் கூட்டங்களிலும் சொன்னது ஆகும். அதையே, “2036-ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்வதற்கு தமிழ்நாடு பணியாற்றி வருகிறது” என்று சொல்லி இருக்கிறார்கள். இவை அனைத்துமே திராவிட மாடலை அப்படியே பின்பற்றுவது ஆகும்.**

திராவிட மாடல் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கும், தமிழ்நாட்டில் காலம் காலமாக இருந்த திட்டங்களுக்கும் முன்னால் ‘வெற்றி’ என்பதைச் சேர்த்து விட்டார்கள். அவ்வளவு தான் விஜய் செய்திருக்கும் சாதனை.

மதுபானங்களை எலைட் பார்களில் வாங்கிக் கொள்ளலாம் என்பதைத் தவிர த.வெ.க. அரசு சுயமாக எந்தப் புதிய திட்டத்தையும் அறிமுகம் செய்யவில்லை. 717 மதுபானக் கடைகளை மூடியதாகச் சொல்லி விட்டு அதை விட அதிகமான எலைட் பார்களை விஜய் திறந்து வைத்திருப்பது தான் இந்த ஆட்சியின் ஒரே சாதனை ஆகும். **டாஸ்மாக் மதுவகைகளை ஆன்லைனில் முன்பதிவு செய்யும் ‘வெற்றி மாடல் அரசின்’ திட்டம் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்க வேண்டியது ஆகும். மதுக்கடைகளை மூடி விட்டதாக விஜய்க்கு பாராட்டு பத்திரம் வாசித்தவர்கள், ‘இந்த ஆண்டு டாஸ்மாக் மூலமாக ரூ.55 ஆயிரம் கோடி வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது’ என்று நிதித்துறை செயலாளர் சித்திக் அளித்த பேட்டிக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?**

தேர்தலுக்கு முன்னதாக விஜய் கொடுத்த எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. சில ‘தனியாருக்கு’ கொடுத்த வாக்குறுதிகளை மட்டும் நிறைவேற்றி வருகிறார்.

**மகளிர் உரிமைத்தொகை 2500 ரூபாய், ஆண்டுக்கு இலவச 6 சிலிண்டர், தமிழகம் முழுவதும் மகளிருக்கு இலவச பேருந்து, வேலையில்லா இளைஞர்களுக்கு மாதம் 4000, முழு பயிர் கடன் தள்ளுபடி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கடன் முழுவதும் தள்ளுபடி, கிராமங்கள் முழுவதும் அனைவருக்கும் வீடு, முதியோர் உதவி தொகை ரூ.3000, விவசாயிகளின் குழந்தைகளுக்கு இலவச கல்வி, பால் கொள்முதல் விலை உயர்வு என த.வெ.க.வின் தேர்தல் வாக்குறுதி எதுவும் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை.**

விஜய் அரசின் முதல் நிதிநிலை அறிக்கையில் ஏதுமில்லை. அதனால் தான் ‘O’ என்ற மதிப்பெண்ணை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் கொடுத்துள்ளார். எதுவும் இருக்காது, எதிர்பார்க்க வேண்டாம் என்பதற்காகத்தான் முன்பு வெள்ளை அறிக்கையே வெளியிட்டார்கள்.

மாற்றம் மாற்றம் என்பது பெயரை மாற்றுவதாக மட்டுமே உள்ளது. ஸ்டிக்கர் ஒட்டுவதாக மட்டுமே உள்ளது. கடந்த ஒரு மாதமாக பல்வேறு துறை ஆய்வுக்கூட்டங்களை முதலமைச்சர் விஜய் நடத்தினார். அதில் என்ன முடிவெடுத்தார்கள்? பெயரை மாற்றுவது பற்றித்தான் முடிவெடுத்துள்ளார்கள் என்று தெரிகிறது. எந்த ஆய்வுக் கூட்டத்திலும் முதல்வர் பேசுவது இல்லை என்கிறார்கள். அவர் வாயைத் திறந்து பேசாமல் இருப்பது கூட நல்லது தான். ஏனென்றால், ‘வாயில ஏதாவது வந்திடும்’ என்பது அவரது புகழ்பெற்ற பொன்மொழி ஆகும். இத்தகைய புண்மொழிகளை உதிர்க்காமல் அவர் பேசாமல் இருப்பது கூட ஒருவிதத்தில் நல்லதுதான்.

**சுயமாகச் சிந்திக்கும் திறனற்ற, யாரோ எழுதியதைப் பார்த்து அப்படியே காப்பி அடிக்கும் பழக்கம் மட்டுமே உள்ள முதலமைச்சராக விஜய் இருக்கிறார் என்பது அவரது ஆட்சியின் முதல் நிதி நிலை அறிக்கையிலேயே தெரிந்துவிட்டது.**

## சட்டப்பேரவைக்கு – கழக உறுப்பினர்கள்

# கருப்புச் சட்டை அணிந்து வந்ததேன்?

### பேட்டியில் – உதயநிதி ஸ்டாலின் விளக்கம்!



“எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு, கடந்த மூன்று மாதங்களாக, `மேகதாது அணைப் பிரச்சினை’, பயிர்க்கடன் தள்ளு படியில் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலை. இந்த ஆட்சி அமைந்த கடந்த மூன்று மாதங்களாக அதிக அளவில் பாதிக்கப்பட்டது விவசாயிகள்தான்.

எனவே, விவசாயிகளுக்கு ஆதரவாக, அவர்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் விதமாக, இந்த அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகத்தான் இன்றைக்கு எங்கள் தலைவரின் உத்தரவின் பேரில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கருப்புச் சட்டை அணிந்து, எங்கள் எதிர்ப்பை இந்த அரசுக்கு தெரிவித்திருக்கிறோம்.”

- தலைமைச் செயலகப் பேட்டியில்
**உதயநிதி ஸ்டாலின்**

## பேரவையில் எங்கள் கேள்விகளுக்கு தைரியமிருந்தால் முதல்வர் எழுந்து பதில் சொல்லட்டும்!

# பட்ஜெட்டில் உருப்படியாக எதுவுமே இல்லை!

### வேளாண் பட்ஜெட் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஆக. 7 -**

**“வேளாண் பட்ஜெட்டில் உருப்படியாக எதுவுமில்லை” என்றும், “பேரவையில் நாளை நாங்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முதலமைச்சர் தைரியமிருந்தால் எழுந்து பதில் சொல்லட்டும்!” என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று, தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.**



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று, தலைமைச் செயலக வளாகத்தில், வேளாண் துறை நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையொட்டி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த காட்சி...!

அவரது பேட்டி வருமாறு:-

இன்றைக்கு த.வெ.க. அரசு வேளாண் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இதை பட்ஜெட் என்று சொல்வதை விட, முதலமைச்சருக்கு முழுக்க முழுக்க ஜால்ரா அடித்து, ஒரு மிகப்பெரிய புகழுரையை அமைச்சர் சபை மரபுகளை மீறி, இந்தச் செயலைச் செய்துள்ளார்.

### எந்தப் புதுத் திட்டமும் இல்லை!

வேளாண் பட்ஜெட்டில் ஏதாவது புதிதாக இருக்கிறதா என்றால், அதில் எதுவும் கிடையாது. இந்த ஆட்சியில் காவிரியில்தான் தண்ணீர் வரவில்லை என்று பார்த்தால், வேளாண் பட்ஜெட்டில் எந்தப் புதுத் திட்டத்தையும் இந்த ஆட்சியாளர்கள் அறிவிக்கவில்லை.

எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு, கடந்த மூன்று மாதங்களாக, `மேகதாது அணை பிரச்சினை’, பயிர்க்கடன் தள்ளுபடியில் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலை. இந்த ஆட்சி அமைந்த கடந்த மூன்று மாதங்களாக அதிக அளவில் பாதிக்கப்பட்டது விவசாயிகள்தான். எனவே, அவர்களுக்கு ஆதரவாக, அவர்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் விதமாக, இந்த அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகத்தான் இன்றைக்கு எங்கள் தலைவரின் உத்தரவின் பேரில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கருப்புச் சட்டை அணிந்து, எங்கள் எதிர்ப்பை இந்த அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

இந்தப் பட்ஜெட்டைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், நேற்றைய தினம் போலத்தான் இன்றைக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் திட்டங்களையெல்லாம் பெயரை மாற்றி, அதற்கு முன்பு ஒரு வார்த்தையை மட்டும் சேர்த்து, அவர்கள் கட்சியின் பெயருடைய வார்த்தையை மட்டும் சேர்த்து, புதுத் திட்டம் போல சில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். எனவே, இந்த பட்ஜெட்டில் உருப்படியாக எதுவுமே கிடையாது.

### வாக்குறுதி - மக்கள் ஏமாற்றம்!

குறிப்பாக, தேர்தல் வாக்குறுதியின் போது முதலமைச்சர் சொன்ன முக்கியமான ஒரு வாக்குறுதி, 5 ஏக்கர் வரைக்கும் நிலம் வைத்திருக்கக் கூடிய எல்லோருக்கும் முழு பயிர்க்கடன் தள்ளுபடி என்று எல்லா இடத்திலும், இந்த வாக்குறுதியைச் சொல்லித்தான் மக்களை ஏமாற்றினார். ஆனால், ஆட்சிக்கு வந்ததும் அதற்கு எதுவுமே செய்யவில்லை. முதலில் என்ன சொன்னார்? 50,000 ரூபாய் வரைக்கும் கடன் தள்ளுபடி என்றார். பிறகு எங்களுடைய கோரிக்கை, விவசாயிகளுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, அதை 75,000ஆக மாற்றினார். ஆனால், இன்றைக்கு விவசாயிகள் நீங்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன மாதிரி முழுக்கடன் தள்ளுபடி வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான பதிலையும் வழக்கம் போல இந்த முதலமைச்சர் வாயைத் திறந்து சொல்லவில்லை.

மேகதாது அணை விவகாரம் இன்றைக்கு ஒவ்வொரு நாளும் எவ்வளவு சீரியஸாகப் போய்க்கொண்டு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். காவிரியில் நமக்குக் கிடைக்கவேண்டிய நீரை, கர்நாடகா அரசு திறக்கவில்லை. `திறக்க முடியாது, கொடுக்க முடியாது’ என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்கள்.

### கர்நாடகாவுக்கு வராதீர்கள்!

முதலமைச்சர் ``நான் போய் பேச்சுவார்த்தை நடத்தப் போகிறேன்” என்றார். ஆனால், ``தயவுசெய்து கர்நாடகாவுக்கு வராதீர்கள், நாங்கள் தண்ணீரெல்லாம் கொடுக்க முடியாது” என்று அங்கு இருக்கக்கூடிய முதலமைச்சரும் சொல்லிவிட்டார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுங்கள் என்று நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறோம்.. காவிரி விஷயத்தில், மேகதாது அணை விஷயத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஒரே கருத்தில் இருக்கிறார்கள், ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவோம் என்று தொடர்ந்து முதலமைச்சருக்கும், இந்த அரசுக்கும் நமது தி.மு.க. சார்பாக கோரிக்கை வைத்துக்கொண்டே இருக்கிறோம். அதற்கும் வழக்கம் போல இந்த முதலமைச்சர் வாய் திறந்து பதில் சொல்ல மாட்டேன் என்கிறார்.

### தி.மு.க. என்றும் துணை நிற்கும்!

“விவசாயிகளுக்கான பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசவேண்டும் என்று நாளைக்கு, கேள்வி நேரம் முடிந்தவுடனே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டும், காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசவேண்டும், விவசாயிகளின் பாதிப்பு குறித்து அவையில் விவாதிக்க வேண்டும்” என்று சபாநாயகரிடம் எங்களுடைய கடிதத்தைக் கொடுத்திருக்கிறோம். அதற்கு வாய்ப்பு கொடுப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்.

அப்போது, இது தொடர்பாக இன்னும் விரிவாகப் பல்வேறு கேள்விகளை நிச்சயமாக நாங்கள் எழுப்புவோம். அதற்கு முதலமைச்சர் வாய் திறந்து பதில் சொல்வார் என்று தமிழ்நாட்டு மக்கள் போல, விவசாயப் பெருங்குடி மக்கள் போல நாங்களும் ஆவலோடு காத்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே விவசாயிகளுக்குத் துணையாக நிற்கும்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினார்.

இதைத் தொடர்ந்து நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில்கள் வருமாறு :-

**கேள்வி:** நீங்கள் என்ன நாடகம் நடத்தினீர்களோ, அதே நாடகத்தைத் தான் த.வெ.கவும் போடுகிறது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் குற்றம் சாட்டியிருக்கிறாரே?

**பதில்:** நாடகமா? என்ன நாடகம்?

**கேள்வி:** நீங்களும் வேளாண் பட்ஜெட் என்று ஒரு நாடகத்தைப் போட்டீர்கள், அவர்களும் அதே நாடகத்தைப் போடுகிறார்கள் என்பது அவருடைய குற்றச்சாட்டாக இருக்கிறது.

**பதில்:** நாங்களா தேர்தல் வாக்குறுதி கொடுத்தோம்? பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப் போகிறோம் என்று நாங்கள் வாக்குறுதி கொடுத்தோமா? சொல்லுங்கள்.

நாளைக்கு, இவை அனைத்தையும் சட்டமன்றத்தில் பேச இருக்கிறோம். தைரியம் இருந்தால், முதலமைச்சர் எழுந்து இதற்கெல்லாம் பதில் சொல்லட்டும். நாங்கள் அவையில் பதில் சொல்கிறோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.




# குண்டேந்தி பீரங்கி வந்தாலும் கொள்கையில் மாறாத கருணாநிதி!

# எங்கள் உள்ளம் குடிகொண்ட உண்மைத் தலைவர் வாழ்கவே!

*நீங்கா நினைவுகளுடன்*

**எஸ்.எஸ்.பழநிமாணிக்கம்**

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தஞ்சாவூர்